பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**04 03 2026** **WEDNESDAY** **6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் கிராமப்புற மேம்பாடு முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2)** தமிழகத்தில் பட்டியலின மக்களுக்கு இதுவரை இல்லாத அளவிற்கு சமூக அநீதி இழைக்கப்படுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

**3)** சிவகங்கை மாவட்டம் இலுப்பைக்குடியில், **5** ஆயிரத்து **300** கோடி ரூபாய் முதலீட்டில் டயர் உற்பத்தி பிரிவு அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டுள்ளது.

**4)** நடப்பாண்டில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று புவி அறிவியல் துறை கூறியுள்ளது.

**5)** சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Hemanth Gowda** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் கிராமப்புற மேம்பாடு முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ஊரகப்பகுதிகளில் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, அப்பகுதியில் இளையோரின் திறனை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் கிராமப்புற மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிக்கும் என்று அவர் கூறினார்.

ஊரக வளர்ச்சித்துறை சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் பட்டியலின மக்களுக்கு இதுவரை இல்லாத அளவிற்கு சமூக அநீதி இழைக்கப்படுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இருப்பினும், சமூக நீதி பேசும் திமுக அரசு, வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

காவல்துறை அதிகாரிகளை சொந்த மாவட்டத்தில் பணியமர்த்தாமல், வேறு மாவட்டங்களில் பணியமர்த்தும் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உத்தரவைகூட, அவரது மகனான தற்போதைய முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நிறைவேற்றவில்லை என்று அவர் குறை கூறியுள்ளார்.

இதற்கெல்லாம் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்றும் டாக்டர் எல். முருகன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

சிவகங்கை மாவட்டத்தில் டயர் உற்பத்தி தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் தமிழக அரசு இன்று கையெழுத்திட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இலுப்பைக்குடி கிராமத்தில் 5 ஆயிரத்து 300 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த டயர் உற்பத்தி பிரிவு அமைக்கப்பட உள்ளதாக கூறியுள்ளார்.

இதன்மூலம், ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசின் கப்பல் கட்டுமானக் கொள்கையும் இன்று வெளியிடப்பட்டுள்ளதாக திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் படிப்படியாக இயற்கை எரிவாயு பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

இன்று ராமேஸ்வரத்தில் இத்தகைய பேருந்து சேவையை தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

***(Sound Byte — சிவசங்கர் - 19 Sec. )***

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, தமிழ் மொழியின் மீது கொண்டுள்ள பற்றை மக்கள் அனைவரும்

உணர்ந்திருப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக நாடுகளுக்கு செல்லும்போதுகூட தமிழின் சிறப்புகளை பிரதமர் பெருமித்துடன் எடுத்துரைத்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மலேசிய பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கை அமைக்க அண்மையில் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் மொழிக்கு உரிய அங்கீகாரத்தை மத்திய அரசு அளித்து வரும் சூழ்நிலையில், திருச்சி மண்டல ரயில்வே அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு இந்தியில் பெயரிடப்பட்டுள்ளது போன்ற நிகழ்வுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும், திருச்சி மண்டல ரயில்வே அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு இந்தியில் பெயரிடப்பட்டுள்ளதற்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

<<<<<<>>>>>>

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் சாயப்பட்டறையுடன் கூடிய ஜவுளிப்பூங்கா அமைக்க திமுக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருவாரூர் மாவட்டம் ஆலங்கோட்டை கிராமத்தில் இந்த ஜவுளிப்பூங்கா அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

வேளாண்மைக்கும், சுற்றுச்சூழலுக்கும் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுத்தும் என்பதை அறிந்தும் திமுக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது தவறானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜவுளிப்பூங்கா அமைக்கப்பட்டால் நிலத்தடி நீர் கடுமையாக பாதிக்கப்படும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரனும் திமுக அரசின் இந்த நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வேளாண் மற்றும் மேய்ச்சல் நிலங்களில் சூரிய மின்சக்தி உற்பத்தித்

திட்டமோ, ஜவுளிப்பூங்காவோ அமைக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி திமுக அரசு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது தவறானது என்றும் திரு டி டி வி தினகரன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

நடப்பாண்டில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று புவி அறிவியல் துறையின் செயலாளர் டாக்டர் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று சிவகாசியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

**(*Sound Byte — ரவிச்சந்திரன் — 50 Sec. )***

<<<<<<<>>>>>>

மத்திய அரசின் செல்வமகள் சேமிப்புத் திட்டம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ், தூத்துக்குடி மாவட்டத்தில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக கோட்ட அஞ்சல்

கண்காணிப்பாளர் திரு செந்தில்குமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***<u>(Sound Byte — செந்தில்குமார் - 50 Sec. )</u>***

<<<<<<<>>>>>>

சர்வதேச உடல் பருமன் தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இதனையொட்டி, நாடு முழுவதும் உடல் பருமனை தடுப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உடல் பருமனை குறைப்பதன் மூலம் மாரடைப்பு, சர்க்கரை நோய் ஆகியவற்றை தவிர்க்க இயலும் என்று நீரிழிவு நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் பிச்சுமணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***<u>(Sound Byte — பிச்சுமணி - 36 Sec. )</u>***

<<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

விழுப்புரம் மாவட்டம் ஆலங்குடி கிராமத்தில் காருடன் கிணற்றில் மூழ்கி உயிரிழந்த நான்கு பேரின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

-------------------

மாநில அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் **155** பேருக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்.

---------------------

தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் இன்று நடைபெற்றது.

------------------

காஞ்சிபுரம் விஷ்ணு காஞ்சியில் புதிய காவல் நிலையம் இன்று திறக்கப்பட்டுள்ளது.

-------------------

திருவண்ணாமலையில் வன உயிரினங்கள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்றது.

-------------------

தூத்துக்குடி மாவட்டத்தில் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Hemanth Gowda** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-13, 21-15** என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Bima Al Ayman** -ஐ வென்றார்.

**----------------**

**Prague** சர்வதேச செஸ் போட்டியின் ஆறாவது சுற்றில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் —குகேஷை வென்றார்.

-----------------

டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

பந்துவீச்சு பிரிவில் பும்ராவும் முதலிடத்தில் உள்ளார்.

-----------------

ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா — வியட்நாம் இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

<<<<<<<**END**>>>>>>